<u>IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, VANDAVASI</u>

**<u>CASE NO: OS.70/2024</u>**

<u>DEPOSITION OF WITNESS: **PW1**</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name/பெயர் | : | இஸ்மாயில் | | : | |
| Father's/Husband's Name தந்தை/கணவர் பெயர் | : | அப்துல் அஜீஸ் | Calling/ தொழில் | : | |
| Village/கிராமம் | : | வந்தவாசி டவுன் | | : | |
| Taluk/தாலுக்கா | : | வந்தவாசி டவுன் | Age/வயது | : | 63 |

The witness sworn under Oaths Act 1969 on this the day of 16th day of June 2026.

**<u>முதல் விசாரணை</u>**

நான் வந்தவாசி டவுனில் வசிக்கிறேன். நான் வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதியை தெரியும். முதல் விசாரணைக்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். படித்துபார்த்து கையொப்பம் செய்தேன். கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

**<u>வாதி தரப்பில் தாக்கல் செய்யும் ஆவணங்கள்</u>**

1. 24.12.1969 தேதியிட்ட அப்துல் கரீமுக்கு அப்துல் அஜித் சாயபு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் அசல் (வந்தவாசி சார் பதிவக ஆவண எண்.2403/1969) அசல் **வா.சா.ஆ.1** ஆகும்.
2. 27.04.1995 வாதிக்கு, கே.எம்.ஏ அப்துல்கரீம் சாயபு எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரம் அசல் (வந்தவாசி சார் பதிவக ஆவண எண்.1019/1995) **வா.சா.ஆ.2** ஆகும்.
3. 09.12.2015 தேதியிட்ட தாவாச் சொத்து குறித்து நகர நத்தம் நிலவரி திட்டத்தின் கீழ் வாதிக்கு தனி வட்டாட்சியர் வழங்கிய மனைவரி தோராயப்பட்ட (பட்டா எண்.16) **வா.சா.ஆ.3** ஆகும்.

எனவே, பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S
Digitally signed by SARANYA S
Date: 2026.06.16 17:45:21 +0530

சார்புநீதிபதி

வந்தவாசி